**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக் கிழமை பிரசங்கம்**
**08 ஜூலை 2016 / 03 ஷவ்வால் 1437**

# திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள "ஹிக்மத்" (விவேகம்) என்பதன் பொருளை அறிதல்

اَلْحَمْدُ لله الَّذِي أَحَاطَ بِكُلِّ شَيْءٍ عِلْمًا وَقَضَى بِمَا يُرِيْدُ حِكْمَةً
وَ حُكْمًا، أَنْعَمَ بِالنعمِ ابْتِلاَءً وَامْتِحَانًا، وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللّهُ
وَحْدَهُ لاَ شَرِيْكَ لَه ذُوْ الْجَلاَلِ وَالإِكْرَامِ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا
مُحَمَّداً عَبْدُه وَرَسُوْلُهُ أَفْضَلُ الأَنَامِ وَ مِصْبَاحُ الظَّلاَمِ، اَللَّهُمَّ
صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَ عَلَى آلِه وَصَحْبِه وَسَلِّمْ تَسْلِيْماً
كَثِيْرًا .أَمَّا بَعْدُ فَيَا أَيُّهَا النَّاسُ اتَّقُوْا اللّهَ حَيْثُ مَا كُنْتُمْ، فَإِنَّ اللهَ
يَعْلَمُ سِرَّكُمْ وَ عَلاَنِيَّتَكُمْ

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான உச்சகட்டமான "தக்வா" (பக்தியின்) மூலம் நமது உள்ளங்களை நிரப்புவோமாக! அல்லாஹ்வின் கயிற்றை உறுதியாகப் பற்றிப் பிடிப்போமாக! ஒருவர் மற்றவரை நேசிப்போமாக! ஓரிறை நம்பிக்கையாளர்கள் மற்றும் "ஹிக்மத்" (நுட்பமான

அறிவு, விவேகம்) வழங்கப்பட்ட நல்லடியார்களில் நின்றும் நாம் ஆகுவோமாக!

ஜமாஅத்தார்களே!

திருக்குர்ஆனை நாம் திறந்து பார்க்கும் போது அதில் ஒரு வார்த்தையை அனைத்து அறிவாற்றலுமிக்க அல்லாஹ் அடிக்கடி கூறுவதை நாம் காணலாம். அந்த வார்த்தை திருக்குர்ஆனில் 20 முறை கூறப்பட்டுள்ளது. அந்த வார்த்தை தான் ”ஹிக்மத்” (விவேகம்) எனப்படும் வார்த்தை ஆகும். ”ஹிக்மத்” எனும் வார்த்தையைப் பற்றி அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனில் பின்வருமாறு கூறுகின்றான்:

ٱدۡعُ إِلَىٰ سَبِيلِ رَبِّكَ بِٱلۡحِكۡمَةِ وَٱلۡمَوۡعِظَةِ ٱلۡحَسَنَةِۖ وَجَٰدِلۡهُم بِٱلَّتِي هِيَ
أَحۡسَنُۚ إِنَّ رَبَّكَ هُوَ أَعۡلَمُ بِمَن ضَلَّ عَن سَبِيلِهِۦۖ وَهُوَ أَعۡلَمُ بِٱلۡمُهۡتَدِينَ
١٢٥

பொருள்: (நபியே!) உம் இறைவனின் பாதையில் (மக்களை) விவேகத்துடனும், அழகிய உபதேசத்தைக் கொண்டும் நீர் அழைப்பீராக! இன்னும், அவர்களிடத்தில் மிக அழகான முறையில் தர்க்கிப்பீராக! மெய்யாக உம் இறைவன், அவன் வழியைவிட்டுத் தவறியவர்களையும் (அவன் வழியைச் சார்ந்து) நேர்வழி பெற்றவர்களையும் நன்கு அறிவான். (அத்தியாயம்: அந்-நஹ்ல், வசனம்:125)

அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

சற்று முன்பு உங்களுக்கு ஓதிக் காண்பிக்கப்பட்ட வசனம், நமது பாசத்திற்குரிய இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களுக்கும், அவர்களின் உம்மத்தினரான (சமுதாயத்தினரான) நமக்கும் புனிதமான வழிகாட்டுதலாக உள்ளது. ”த**ஃ**வா” எனப்படும் இறை அழைப்புப் பணியைச் செய்யும் போது இரண்டு முக்கிய அம்சங்களில் கவனமாக இருக்குமாறு அது வழிகாட்டுகின்றது. ஒன்று, நாம் அடைய விரும்பும் நோக்கமாகும். அழைப்புப் பணியின் நோக்கம் முழுக்க முழுக்க அல்லாஹ்வுக்காக இருக்க வேண்டுமெனவும், அல்லாஹ்வை மகிழ்விக்கவும் அவனது கிருபையை வேண்டியும் நற்காரியங்களை நாம் புரிய வேண்டும் எனவும் மேற்கண்ட வசனம் மிகவும் உறுதியாகக் கூறுகின்றது. எனவே, ஒரு உண்மையான ”முஃமின்” (ஓரிறை நம்பிக்கையாளர்) ”தஃவா” செய்யும் போது, மனிதர்களுக்கு அல்லாஹ்வின் பக்கம் நேர்வழி காட்ட வேண்டும் என்பதே அவரது நோக்கமாக இருக்க வேண்டும். மற்ற பாதைகளின் பக்கமோ அல்லது சுயமாக ஏற்படுத்திக் கொண்ட நோக்கத்தின் பக்கமோ அழைத்துச் செல்வதாக இருக்கக் கூடாது.

”தஃவா” பணியைச் செய்யும் போது, அதாவது, மற்றவர்களை இஸ்லாத்தின் பால் அழைக்கும் போது ஒரு ”முஃமின்” கவனத்தில் கொள்ள வேண்டிய மற்றொரு விஷயம், ஆக்கப்பூர்வமான, அறிவுப்பூர்வமான அணுகுமுறையின் மூலம் இஸ்லாத்தின் தூதை எடுத்துரைப்பதாகும்.

எனினும், நமது சொற்களும் செயல்பாடுகளும் ”ஹிக்மத்” எனும் நுண்ணறிவாலும் விவேகத்தாலும் நிரம்பியதாக எப்போது அமையும்?

இதற்கு பதிலளிக்கையில்: ”ஒருவர் ஒரு விஷயத்தை அதற்குப் பொருத்தமான இடத்தில் வைக்கும் ஆற்றலைப் பெறும் போது ”ஹிக்மத்” தை அடைவதில் அவர் வெற்றிகண்டவராக இருப்பார் எனச் சில அறிஞர்கள் கூறுகிறார்கள்.

இதன் மூலமாகத் தெரிய வரும் கருத்து யாதெனில், தனது நடத்தையில் அறிவுப்பூர்வமாக நடந்து கொள்ளும் ஒருவர், மற்றவர்களுடன் பழகும் போது நஷ்டமடைந்தவராக ஆக மாட்டார். ஒரு ”மு:மின்” மற்றவர்களுடன் பழகும் போது அறிவுப்பூர்வமாக நடந்து கொள்வதை எப்போதும் உறுதி செய்பவராக இருப்பார். அவரது சொற்களும் செயல்களும் மற்றவர்களால் எளிதில் புரிந்து கொள்ளப்படுவதையும், ஏற்றுக் கொள்ளப்படுவதையும் உறுதி செய்பவராக இருப்பார். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா தனது அடியார்களுக்குக் கூறும் கருத்துக்கள் எவ்வாறு எளிதில் புரிந்து கொள்ளப்படுவதாகவும், மனித உள்ளங்களால் கிரேகிக்க முடிவதாகவும் உள்ளது என்பதை நாம் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். அல்லாஹ் திருக்குர்ஆனில் பகுத்தறிவு வாய்ந்த மக்களுக்கு, ( لقوم يعقلون ) சிந்திக்கும் சமுதாயத்தினருக்கு ( لقوم يتفكرون ) எனப் பல இடங்களில் குறிப்பிடுகிறான்.

எனவே, திருக்குர்ஆனின் அணுகுமுறையை நமது சொற்கள், செயல்கள் மற்றும் பழக்க வழக்கங்களில் ஆர்வத்துடன் நாம் பின்பற்ற வேண்டும். சில விஷயங்களை - அவை பொருத்தமான விஷயங்களாகும்; அவற்றை மற்றவர்களுக்குக் கூறுவது அவசியமாகும் என நாம் கருதுவதால்- அவற்றை அடிக்கடி மற்றவர்களுக்குக் கூறி வருகிறோம். ஆனால், அதனால் ஏற்படும் நீண்ட கால பின் விளைவுகள் யாவை? அவற்றைப்

பற்றி மற்றவர்கள் என்ன நினைப்பார்கள்? என்பதைப் பற்றியெல்லாம் நாம் சிந்திப்பதில்லை.

உதாரணமாக, நீங்கள் ஜமாஅத்துடன் தொழுது கொண்டிருக்கின்றீர்கள். அப்போது ஜமாஅத்தார்களில் ஒருவர் தனது கைத்தொலைபேசியை அணைக்கவோ அல்லது *silent mode-* ல் போடவோ மறந்து விட்டார்; ஜமாஅத்துடன் தொழுது கொண்டிருக்கும் போது அவரது கைத்தொலைபேசியின் மணி அடிக்கின்றது என்றால், அவர் விஷயத்தில் நீங்கள் எப்படி நடந்து கொள்வீர்கள்? தொழுகை முடிந்ததும் உடனே அவரைத் திட்ட முயற்சிப்பீர்களா? அல்லது மௌனமாக இருந்து விடுவீர்களா?

முஆவியா பின் அல்-ஹகம் அல்-சுலமி (ரலி) எனும் நபித்தோழர் விஷயத்தில் இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் கடைப்பிடித்த அணுகுமுறையை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஜமாஅத்துடன் தொழுது கொண்டிருந்த ஒரு தோழர் தும்மினார். அதற்கு அவர் ”அல்ஹம்துலில்லாஹ்” எனக் கூறிய போது, அதே ஜமாஅத்துடன் தொழுது கொண்டிருந்த முஆவியா பின் அல்-ஹகம் அல்-சுலமி (ரலி) ”யர்ஹமகல்லாஹ்” எனப் பதில் கூறினார்கள். தொழுகை முடிந்ததும் முஆவியா (ரலி) அவர்களைக் கண்டிக்கும் போது ரசூலுல்லாஹி(ஸல்) எப்படி நடந்து கொண்டார்கள் என்பதை இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும். முஆவியா (ரலி) அவர்களே தெரிவிக்கின்றார்கள்: ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் தொழுகையை முடித்த பின்பு -அப்படிப்பட்ட ஒரு சிறந்த ஆசிரியரை அதுவரை நான் பார்த்ததில்லை; அவர்களின் போதனையைப் போன்ற சிறந்த போதனைகளை நான் கேட்டதில்லை-

என்னைக் கண்டிக்கவில்லை. அடிக்கவில்லை; திட்டவுமில்லை. மாறாக அவர்கள் கூறினார்கள்:

إِنَّ هَذِهِ الصَّلَاةَ لَا يَصْلُحُ فِيهَا شَيْءٌ مِنْ كَلَامِ النَّاسِ ، إِنَّمَا هُوَ التَّسْبِيحُ وَالتَّكْبِيرُ وَقِرَاءَةُ الْقُرْآنِ

பொருள்: தொழுகையில் மனிதர்களின் பேச்சுக்கள் இடம் பெறுவது முறையல்ல; தஸ்பீஹ், தக்பீர், திருக்குர்ஆன் ஓதுதல் போன்றவை தான் தொழுகையில் ஓதப்பட வேண்டும். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் முஸ்லிம் ரஹ்)

இமாம் நவவீ (ரஹ்) கூறுகிறார்கள்: மேற்கண்ட ஹதீது தெரிவிக்கும் கருத்து யாதெனில், "ஒரு அறியாத மனிதருக்கு ரசூலுல்லாஹி(ஸல்) போதிக்கும் போது, அவரைத் திட்டவுமில்லை, குறை கூறவுமில்லை என்பது மட்டுமல்ல, விவேகத்தால் நிறைந்த ஒரு மரியாதையான அணுகுமுறையை அவர் விஷயத்தில் கடைப்பிடித்துள்ளார்கள்" என்பதாகும்.

ஜமாஅத்தார்களே!

"தவறுகளை அறியாமையின் காரணமாக செய்பவர்களும், ஒரு விஷயம் தவறென ஏற்கனவே தெரிந்திருந்தும் அந்தத் தவறைச் செய்பவர்களும் சமமாக ஆகமாட்டார்கள்" என்பதை நாம் அறிய வேண்டும். சில நேரங்களில், சூழ்நிலையைப் பொறுத்து ஒரு மனிதர் கடினமாக இருப்பதும் அவசியமாகும். சில நேரங்களில், மரியாதையான அணுகுமுறை அதிகப் பயனுள்ளதாக இருக்கும். சில நேரங்களில், மௌனமாக இருப்பதே

சிறப்பாக இருக்கும். குறிப்பாக, சில விஷயங்களுக்கு எதிராக நாம் குரல் கொடுத்தால் அல்லது சிலருக்கு வழிகாட்ட நாம் முயற்சித்தால் அது பெரிய பிரச்சனைக்குக் காரணமாகி விடலாம். நாம் அடைய விரும்பும் ”மஸ்லஹத்” (பொது நலனுக்கு) எதிராக அம்முயற்சி அமைந்து விடலாம்.

ஒரு நாகரீகமான முஸ்லிம், மற்றவர்களுக்கு அல்லாஹ்வின் பக்கம் வழிகாட்ட சரியான அணுகுமுறையைக் கடைப்பிடிப்பவராக இருப்பார். ஒருவருக்கு அல்லாஹ்வின் பக்கம் நேர்வழி காட்டுவதற்கான முயற்சியை முறைப்படி செய்வது அவசியமாகும். சூழ்நிலையைக் கவனத்தில் கொள்ள வேண்டும். யாருக்கு நாம் வழிகாட்ட விரும்புகின்றோமோ அவரது புரிந்து கொள்ளும் ஆற்றல், ஏற்கும் தன்மை, அல்லாஹ்வுக்கு அவர் எந்த அளவு கட்டுப்பட்டு நடப்பவராக இருக்கின்றார் என்பதையெல்லாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அன்பிற்கினிய ஜமாஅத்தார்களே!

ஒருவர் மற்றவருடன் பழகும் போது விவேகத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய விஷயங்களில் மற்றொன்று, விவாதம் மற்றும் சம்பாஷனைகள் ஆகும். விவாதம் செய்யும் போது முறைப்படியான அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதை உறுதி செய்ய வேண்டும். குறிப்பாக, முரண்பட்ட கருத்துக்களைக் கொண்டுள்ள சிலருடன் நேருக்கு நேராக விவாதிக்க முற்படும் போது முறையான அணுகுமுறையைக் கடைப்பிடிப்பது அவசியமாகும். ஒருவர், சில விஷயங்களை விவாதிப்பது அவசியம் எனக் கருதினால், சில நிபந்தனைகளுடன் இஸ்லாம் அதற்கு அனுமதி வழங்கினால், விவாதத்தின் போது அந்த நிபந்தனைகளைப் பின்பற்றுவது

அவசியமாகும். விவாதத்தின் ஆதாரங்களை முன் வைத்து, கருத்துக்களைத் தெரிவிக்கும் போது அறிவுப்பூர்வமான வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்து பயன்படுத்துவதும், தனது செயல்களைப் பற்றிய உணர்வுடன் இருப்பதும், கைகளைக் கொண்டு சைக்கினை செய்வதில் கவனமாக இருப்பதும், உணர்வுகளைக் கட்டுப்படுத்துவதும் அவசியமாகும். நமது இறுதி நோக்கம் யார் வெற்றி பெறுகிறார், யார் தோல்வியுறுகின்றார் என்பதாக இருப்பது கூடாது. உண்மையானக் கருத்தைத் தெரிந்து கொள்வதற்கும், மற்றவர்களுக்கு அல்லாஹ்வின் பாதையின் பால் நேர்வழி காட்டுவதற்கான முயற்சியாகவே நமது நோக்கம் இருக்க வேண்டும். இது தான், முற்கால அறிஞர்கள் கருத்துவேறுபாடுகளை எதிர்கொண்ட போது பின்பற்றிய ஒழுங்குமுறையாக இருந்தது.

இமாம் ஷாஃபிஈ (ரஹ்) தெரிவிக்கின்றார்கள்:

உண்மை என்பது என்னிடம் உள்ளதா அல்லது எதிர் தரப்பினர் இடம் உள்ளதா என்பதைத் தெரிந்து கொள்ளும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே தவிர, எவருடனும் கல்வி சம்பந்தமான விஷயத்தில் நான் விவாதித்தது இல்லை.

தற்கால சூழ்நிலையை ஒத்துப் பார்க்கும் போது, கடந்த காலத்தில் எந்த அளவு சிறப்பாக விவேகமான அணுகுமுறை கடைப்பிடிக்கப்பட்டுள்ளது என்பதை சிந்திக்க வேண்டும். விவாதத்தின் போது சில நேரங்களில் மக்கள் சண்டையில் ஈடுபடுகிறார்கள். எவ்வித பயனுமில்லாத விஷயங்களை நிரூபிப்பதற்காக சமூக ஊடகங்களில் மற்றவர்களைக்

குறை கூறி, திட்டுகிறார்கள். ”நவூதுபில்லாஹி மின்ஹா” (இதிலிருந்து அல்லாஹ் நம்மைப் பாதுகாப்பானாக!)

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

”ஹிக்மத்” எனப்படும் விவேகம் மூன்று தூண்களில் அமைக்கப்படுள்ளதாக அறிஞர்கள் தெரிவிக்கின்றார்கள்: முதலாவது தூண் ”இல்ம்” (கல்வியறிவு) ஆகும். இரண்டாவது ”அல்-ஹில்ம்” (கோபம் வரும் போது தன்னைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது) ஆகும். மூன்றாவது, ”அல்-அனாஹ்” (தீவிரம் காட்டாமலிருப்பது) ஆகும். இன்ஷாஅல்லாஹ், அடுத்த பிரசங்கங்களில் ”ஹிக்மத்” சம்பந்தமான மற்ற கருத்துக்கள் விவாதிக்கப்படும். எல்லாம் வல்ல அல்லாஹ் சுப்ஹானஹூ வதஆலா சரியான வார்த்தைகளையும் செயல்களையும் அறிந்து பின்பற்றும் ஆற்றலை நமக்கு வழங்குவானாக! ஒவ்வொரு விஷயத்தையும் அதற்குரிய முறையான இடத்தில் வைக்கும் வழிமுறையை நமக்கு எளிதாக்குவானாக! நாம் ”ஹிக்மத்” (விவேகம்) வழங்கப்படுவோமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.